**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**முன்னிலை : திருமதி. மு.அலிமா, பி.ஏ., எல்.எல்.எம்,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
**நாகர்கோவில்.**
2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04–ம் நாள் புதன்கிழமை

**நி.ம.எண். 20/2022**

**இன்**

**TN/L2/ArBp/MHEFL/2016/332**

மகேந்திரா கிராமப்புற வீட்டு நிதி லிமிடெட்,
அதற்காக அங்கீகரிக்கப்பட்ட நபர் மூலமாக . . . மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர்

/ எதிர் /

முருகேசன்
. . . எதிர்மனுதாரர் / 2–வது தீர்ப்பு கடனாளி

இம்மனுவானது 20.11.2024 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் /தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. பிரைட்வின் சேவியர் அவர்கள் ஆஜராகியும், 2–வது எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. C. சிவா அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, இருதரப்பு வாத உரை மற்றும் வழக்குக் கோப்பு ஆகியவைகளை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2024.12.04 17:32:37 +0530

**உ த் த ர வு**

இந்நிறைவேற்றுதல் மனுவானது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 கட்டளை 21 விதி 37, 38, 39, 40 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு எதிர்மனுதாரரை கைது செய்து உரிமையியல் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோரி மனுதாரர்/தீர்ப்பு கடனாளியால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்** :

இம்மனுவின் மனுதாரர் மகேந்திரா கம்பெனியில் துணை மேலாளராக பணி புரிந்து வருகிறார் என்றும், மனுதாரர் நிறுவனத்தால் மனுதாரருக்கு இம்மனுவை தாக்கல் செய்ய 23.05.2017–ல் பொது அதிகார ஆவணம் பிறப்பிக்கப்பட்டது என்றும், அதனால் இந்த மனுவானது எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தீர்ப்பு கடனாளிகளுக்கு எதிராக மனுதாரர் Arbitration வழக்கானது Arbitrator Mr. Balasaheb Dhumal முன்னிலையில் ரூ.60,535/–ஐ 3% வட்டியுடன் 28.07.2015 முதல் தொகை திரும்ப பெறப்படும் காலம்வரை வட்டியுடன் கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கடந்த 24.02.2017 அன்று கீழ்கண்டவாறு award ஆனது Arbitration–ல் வழங்கப்பட்டது என்றும், அதில் (a) The claim petition is allowed,(b) The Respondents do hereby, jointly and severally pay to the claimant a sum of Rs.60,535/– together with interest at the rate of 18% per annum from 28.07.2015, till the date of this award and thereafter at the rate 18% per annum from the date of this award till the date of payment, (C) The claimant is further directed to adjust any amount paid by the Respondents during the pendency of this Arbiration proceeding from the Award amount, (d) It is awarded that the Respondents shall pay a sum of Rs.10,000/– (Rupees Ten Thousand only) jointly and severally to the claimant towards the cost of this reference என குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிவு 34 Arbitration and Conciliation Act,1996 படி வரையறுக்கப்பட்ட 3 மாதங்களுக்கு பிறகு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வேறு எந்த நீதிமன்றத்திலும் தீர்ப்பு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2024.12.04 17:33:00 +0530

கடனாளிகளால் Arbitrator –ஆல் வழங்கப்பட்ட உத்தரவு தவறு என எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மனுதாரரால் Arbitrator–ஆல் வழங்கப்பட்ட உத்தரவை எதிர்மனுதாரர்களிடம் செயல்படுத்த எந்த நிறைவேற்றுதல் மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், தீர்ப்பு கடனாளிகளுக்கு Award–ல் குறிப்பிடப்பட்ட தொகையை செலுத்துவதற்கு தகுதி இருந்தும், மேற்படியார்கள் தொகையை செலுத்தவில்லை என்றும், Arbitration –ல் award பிறப்பிக்கப்பட்ட பிறகும், தீர்ப்பு கடனாளிகள் தொகையை செலுத்த முன்வரவில்லை என்றும், Arbitration Award–படி தீர்ப்பு கடனாளிகள் இணைந்தும், தனித்தனியாகவும், award–ல் சொல்லப்பட்டுள்ள தொகையை amount வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர் என்றும், இந்த மனு கைது செய்வதற்காக பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டு இருப்பதால் 1, 3, 4 தீர்ப்பு கடனாளிகள் பெண்கள், அதனால் மேற்படியார்கள் இந்த மனுவில் சேர்க்கப்படவில்லை என்றும், எனவே, எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளியை கைது செய்து உரிமையியல் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோரி தீர்ப்பாணை பெற்றவரான மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>

இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், 2–வது தீர்ப்பு கடனாளிகள் உத்தரவாதம் (guarantor) அளிப்பவர் மட்டுமே, கடனாளி அல்ல என்றும், 2–எதிர்மனுதாரர் தினக்கூலி வேலை செய்கிறார் என்றும், அவருக்கு award amount–ஐ செலுத்துவதற்கு போதிய வசதி இல்லை என்றும், 1–வது தீர்ப்பு கடனாளியே கடன் பெற்றவர் என்றும், அவரிடம் இருந்தே தொகையை வசூலிக்க மனுதாரர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரரை கைது செய்ய இந்த மனு தாக்கல் செய்திருப்பது சரியானது அல்ல என்றும், எனவே, இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2024.12.04 17:33:16 +0530

4) <u>தீர்வுக்குரிய பிரச்சினை</u>:–

இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை மற்றும் அசல் வழக்கு கோப்பு ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டது.

6) மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் இந்நிறைவேற்றுதல் மனுவானது தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளியை கைது செய்து உரிமையியல் சிறைக்கு அனுப்ப உத்தரவிடக்கோரி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளி தரப்பில் தீர்ப்பாணைத் தொகையை திரும்ப செலுத்துவதற்கான எவ்வித அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இல்லை என்று எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தரப்பில் கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) மேலும், மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் தீர்ப்பாணை தொகையை திரும்ப செலுத்த எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளிக்கு போதிய அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளது என்பது குறித்தும், எதிர்மனுதாரர்/2–வது தீர்ப்பு கடனாளி தீர்ப்பாணை தொகையை திரும்ப செலுத்தாமல் வேண்டுமென்றே தவிர்த்து வருகிறார் என்பது குறித்தும், மனுதாரர் இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜராகி போதிய சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் (no means evidence)மூலம் நிரூபிக்க தவறியுள்ளார். ஆகையால், மனுதாரர் மனுவை அனுமதிப்பதில் எவ்வித நற்கூறுகளும் இல்லை. எனவே, மனுதாரரின் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்று நீதியின் நலன் கருதி இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2024.12.04 17:33:33 +0530

9) <u>இறுதியாக</u>,

இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04–ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2024.12.04 17:33:46 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

நாகர்கோவில்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2024.12.04 17:33:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

நாகர்கோவில்.

மு.மா.உ.நீ. நாகர்கோவில்.
அசல்/வரைவு உத்தரவு
நி.ம.எண்.20/2022 ன்
TN/L2/ArBp/MHEFL/2016/332
நாள் : 04.12.2024.